வேளாண்மைத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

**மானியக் கோரிக்கை எண் 5 – வேளாண்மை**

# 2010-2011


**வீரபாண்டி எஸ். ஆறுமுகம்**

**வேளாண்மைத் துறை அமைச்சர்**



©

தமிழ்நாடு அரசு

2010

# கொள்கை விளக்கக் குறிப்பு 2010-11

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | **1** |
| 2 | வேளாண்மை | **5** |
| 3 | சர்க்கரைத் துறை | **33** |
| 4 | தோட்டக்கலை | **36** |
| 5 | தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை | **40** |
| 6 | தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் வரையறுக்கப்பட்டது | **44** |
| 7 | வேளாண்மைப் பொறியியல் | **4** |
| 8 | நீர்வடிப்பகுதி மேம்பாடு | **52** |
| 9 | வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி | **62** |
| 10 | விதைச்சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு | **66** |
| 11 | வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம் | **69** |

## அத்தியாயம் 9

## வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம்

வேளாண்மைத் தொழிலில் ஏற்பட்டுள்ள வேளாண் தொழிலாளர் பற்றாக்குறை, விலைவாசி உயர்வு, வேளாண் இடுபொருட்களின் விலையேற்றம், உற்பத்தியாகும் பொருட்களுக்கு வேளாண் பெருமக்களுக்கு கிடைக்கும் வருமானத்தின் நிலையற்ற தன்மை, முக்கிய உணவுப்பொருட்களான அரிசி, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றில் நுகர்வோர் விலையேற்றத்திற்கேற்ப விவசாயிகளுக்குக் கிடைக்கும் விலையில் மாற்றமின்மை ஆகிய பலவகை இன்னல்களையும், சவால்களையும் தமிழக விவசாயிகள் எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் மகசூலை அதிகரிக்கவல்ல இரகங்களை ஆராய்ச்சி வாயிலாக கண்டறிதல், சீரான சாகுபடி முறை மற்றும் உர மேலாண்மை, களை, பூச்சி, பூஞ்சாணம் போன்ற இன்னல்களிலிருந்து மீள பாதுகாப்பு முறைகளை வகுத்தல், உழவு, விதைப்பு, களையெடுத்தல் மற்றும் அறுவடை போன்றவற்றிற்கு தேவையான இயந்திரங்களை வடிவமைத்தல் ஆகிய பணிகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஈடுபட்டுள்ளது. மேலும் ஆராய்ச்சி முடிவுகள், காலமாற்றத்திற்கேற்ப விவசாயிகளைச் சென்றடைய தக்க வழிமுறைகளைக் கண்டறிந்து செயல்படுத்துதல், அவற்றினை செயல்முறை விளக்கமாக எடுத்துரைத்தல் மற்றும் விவசாயிகளின் விளை பொருட்களை இலாபகரமாக விற்பனை செய்ய அவற்றின் விலை நிலவரங்களை முன்னறிவித்தல் ஆகிய பணிகளையும் ஆற்றி வருகின்றது. மேற்குறிப்பிட்ட அனைத்தும் அறிவியல் சார்ந்த முறையில் சென்றடைய மனிதவள மேம்பாடு அவசியமாகிறது. இவ்வாறான தொழில் நுட்ப மனித ஆற்றலை உருவாக்கும் பொருட்டு வேளாண்மை சார்ந்த கல்வியினையும் மற்றும் ஆராய்ச்சியினையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கிவருகிறது.

### I. வேளாண்மைக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வளர்ந்து வரும் அறிவியல் மாற்றங்களை உள்ளடக்கி வேளாண்மைக் கல்வியினை தனது 10 கல்லூரிகள் (அட்டவணை 9) மூலமாக வழங்கி வருகிறது. இதன் பொருட்டு பாடத்திட்டங்களை மேம்படுத்தியும், புதிய பாடத் திட்டங்களை அறிமுகப்படுத்தியும், கணினி வழி தேர்வு முறைகளை உருவாக்கியும், இந்தியாவிலேயே சிறந்த பல்கலைக்கழகமாக செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். தற்பொழுது ஐந்து இளமறிவியல் பட்டப் படிப்பில் 527 மாணவர்களும், ஏழு இளம் தொழில் நுட்பவியல் பட்டப்படிப்பில் 265 மாணவர்களும் 2009–10ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டு பயின்று வருகின்றனர். இது தவிர ஈராண்டு வேளாண் பட்டயப் படிப்புகள், திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையம் மற்றும் தென் மாவட்டங்களிலுள்ள அருப்புக் கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி வேளாண் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் தற்போது 189 மாணவ–மாணவிகள் 2009–10ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டு பயின்று வருகின்றனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், 2009 – 10 ஆம் ஆண்டில் 355 மாணவர்கள் முதறிவியல் பட்டப்படிப்பிலும், 102 மாணவர்கள் முனைவர் பட்டப்படிப்பிலும் பயின்று வருகின்றனர். இக்கல்வியாண்டில், வேளாண் வணிகம் மற்றும் மேம்பாடு மேலாண்மை என்ற புதிய முனைவர் பட்டப்படிப்பு துவங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற மாணவ–மாணவிகள் இந்திய ஆட்சிப்பணி, இந்திய வருவாய்ப்பணி, இந்திய வனப்பணி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி–1 தேர்வு, வங்கிகளின் தேர்வு மற்றும் பல்வேறு அரசுப் பணிகளிலும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். குறிப்பாக இளமறிவியல் (வனவியல்) படித்த 6 மாணவர்கள் இவ்வாண்டு இந்திய வனப்பணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். இந்த கல்வியாண்டில் (2010–11) முதறிவியல் மற்றும் முனைவர் பட்டப்படிப்பில் இணையவழி தேர்வு முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. மேலும், முதறிவியல் பட்டப்படிப்பு மற்றும் முனைவர் பட்டப்படிப்பில் இவ்வாண்டில் மாணவர்கள் தாங்களே பாடத்திட்டங்களைத் தேர்வு செய்து படிக்கும் முறை

அறிமுகப்படுத்தப்படவுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கனடாவிலுள்ள சஸ்கட்ச்வான் பல்கலைக்கழகம் மற்றும் மெக்கில் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மூதறிவியல் பட்டப்படிப்பில் இரட்டைப்பட்டப் படிப்புத்திட்டத்தை வழங்கவுள்ளது.

இது தவிர, திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககத்தின் வாயிலாக மூன்று மூதறிவியல் பட்டப்படிப்புகளும், இரண்டு மூதறிவியல் பட்டயப் படிப்புகள், 21 தலைப்புகளில் 6 மாத கால சான்றிதழ் பாடங்கள் தமிழ் மொழி வாயிலாகவும் மற்றும் 5 சான்றிதழ் பாடங்கள் ஆங்கில மொழி வாயிலாகவும் நடத்தப்படுகின்றன.

## II. வேளாண் ஆராய்ச்சி

### (அ) 2009–10ஆம் ஆண்டில் கண்டுபிடிப்புகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள 10 கல்லூரிகள், 36 ஆராய்ச்சி நிலையங்கள் (அட்டவணை 10), 14 வேளாண்மை அறிவியல் நிலையங்கள் (அட்டவணை 11) ஆகியவற்றில் அறிவியலாளர்கள் மற்றும் மாணவர்கள் பண்ணை சார்ந்த அறிவியல் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இதன் விளைவாக, சென்ற ஆண்டில் (2009), அண்ணா (ஆர்) 4 நெல், கோ(கேவி) 2 குதிரைவாலி, விபிஎன் (ஜ ஜ ) 3 பாசிப்பயறு, டிஎம்வி (எஸ்வி) 7 எள், ஒய்ஆர்சி எச்1 ஆமணக்கு, எஸ்விபி ஆர் 4 பருத்தி, கோசி (எஸ்சி) 24 கரும்பு, கோ(ஜ ஜ ) 3 கினியாபுல், கோ(பி)எச் 2 கத்தரி, பிஎல்ஆர் (எஸ்ஜ ) 2 புடல் மற்றும் வி ஆர் ஐ (சிடபிள்யூ) எச்1 முந்திரி ஆகிய 11 புதிய பயிர் இரகங்களும், மேம்படுத்தப்பட்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பருப்பு உடைக்கும் கருவி, டிராக்டரால் இயங்கும் இரு வரிசையில் துல்லியமாக அங்கக மற்றும் இரசாயன உரம் இடும் கருவி, குலையிலிருந்து பாக்கு பிரித்தெடுக்கும் இயந்திரம் மற்றும் செம்மை நெல் சாகுபடிக்கான விசைக் களையெடுப்பான் ஆகிய நான்கு புதிய பண்ணைக் கருவிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

நெல் ஆராய்ச்சியில், மூன்று வழிக்கலப்பின் மூலம், நல்ல வியாபாரத் திறனுடைய, சம்பா மற்றும் தாளடி பருவத்தில் பயிரிட ஏற்ற, சிறந்த வீரிய ஒட்டுக்கள் உருவாக்குதல், பின் இனக்கலப்பின் மூலம் நல்ல தரமுள்ள அரிசியுடைய ஆண் மலட்டுத்தன்மை மற்றும் அயல் மகரந்தச் சேர்க்கை அதிகரிக்கும் பூக்கும் காரணிகள் கொண்ட பெண் வளர்ப்புகளை உருவாக்குதல் ஆகிய ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

பழப்பயிர்கள் குறித்த ஆராய்ச்சியில் வாழையில் எச்–212 (AB), என்.பி.எச். 02–01 (AAB), எச்–531 (AAB), எச்–96/7 மற்றும் பப்பாளியில் சிகப்பு சதைப் பற்றுடைய 9–1 (D) ஆகிய இரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மக்காச்சோளப் பயிர் மற்றும் பயறுவகைகளின் விளைச்சலைப் பெருக்க வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் ஊட்டச்சத்துக்கள் அடங்கிய இலைவழி செலுத்தக்கூடிய 'மக்காச்சோள டானிக்' மற்றும் 'பயறுவகைகளுக்கான டானிக்' உருவாக்கப்பட்டன.

2009–10ஆம் ஆண்டில் வானிலை நிலவரத்தைக் கொண்டு சாகுபடி சம்பந்தமான முடிவுகள் மேற்கொள்வதற்காக, வட்டார அளவில் மத்திய கால (அடுத்த நான்கு நாட்களுக்கான) வானிலை முன் அறிவிப்புகள் தயாரிக்கப்பட்டு வேளாண் கால நிலை ஆராய்ச்சி மையத்தால் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக இணைய தளத்தின் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

2009–10ஆம் ஆண்டில் வேளாண் விளை பொருட்களைப் பதனிடும் முறைகளில் (வெல்லம் தயாரித்தல், காய்கறி மற்றும் பழங்கள் பதனிடுதல்) ஆகியவற்றில் அறுவடைக்கு பிந்திய இழப்பினைக் குறைக்க வழி முறைகளைக் கண்டறிதல், செம்மை நெல் சாகுபடிக்கேற்ற நாற்று வளர்ப்பு சாதனம், நாற்று நடவு இயந்திரம், தானே சுழலும் களையெடுக்கும் கருவி மற்றும் பின் செய் நேர்த்திக்கான அமைப்பினைச் சீர் செய்து மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2009–10ஆம் நிதியாண்டில் பல்வேறு பயிர் இரகங்களில் சுமார் 172 டன் வல்லுநர் விதைகளை உற்பத்தி செய்து ஆதார மற்றும் சான்று விதைப் பெருக்கத்திற்காக தமிழக அரசின் வேளாண்மைத்துறை, தேசிய விதைக் கழகம் மற்றும் பிற பொது நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பெருகி வரும் விதைத் தேவையைக் கருத்தில் கொண்டு, சுமார் 750 டன் அளவிற்கு ஆதார மற்றும் உண்மைநிலை விதைகளும் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) 2010–11ல் நடைபெற உள்ள ஆய்வுகள்**

இந்த நிதியாண்டில் (2010–11) மரபணு பொறியியல் தொழில் நுட்பம் மூலமாக கரும்பு பயிரில் உயிரற்ற தாக்கங்களுக்கு எதிரான தாங்கும் தன்மை, நெற்பயிரில் உயர் வெப்ப நிலையைத் தாங்கும் தன்மை மற்றும் ஆர்.என்.ஏ.ஐ. தொழில்நுட்பம் மூலமாக வைரஸ் நோய்களுக்கு எதிரான தாங்கும் தன்மையை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

2010–11ஆம் ஆண்டில், காலநிலை மாற்றங்களுக்குகேற்ப பயிர் மேலாண்மை உத்திகள், காலநிலை முன்னறிவிப்பு செய்தலில் அறிவிப்பின் துல்லியத்தை மேம்படுத்த ஆராய்ச்சி, வானிலை சார்ந்த பூச்சி மற்றும் நோய் பற்றிய முன்னறிவிப்பு, மானாவாரி நிலங்களில் இயந்திர சாகுபடிக்கேற்ப பயிர் செய்யும் இடைவெளி முறையை மாற்றி அமைத்தல், மானாவாரியில் களை கட்டுப்பாட்டிற்கான நானோ களைக்கொல்லி பற்றிய ஆய்வு, சூரியகாந்தி பயிருக்கான துல்லிய பண்ணையத்திட்டம், நிலக்கடலையின் விளைச்சலைப் பெருக்க வினை ஊக்கிக் (Plant Growth Regulator) கலவை உருவாக்குதல், பழங்கள் மற்றும் காய்கறிகள் நீடித்த நாட்கள் வைத்திருக்கும் பொருட்டு அறுவடைக்கு பின்செய் நேர்த்திகளில் ஆய்வு மேற்கொள்ளுதல், நகராட்சி பகுதிகளின் திடக்கழிவினை விரைவாக மக்கவைக்கும் புதிய தொழில்நுட்பத்தினை உருவாக்குதல், எண்ணெய்வித்துக்கள், பருத்தி, கரும்பு, நெல், பயறுவகைகள் மற்றும் காய்கறி பயிர்களின் விளைச்சலை அதிகரிக்கும் பொருட்டு சமச்சீர் உரக்கலவையினை உருவாக்குதல் ஆகிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதுதவிர, மண்வள ஆய்வின் அடிப்படையில் சமச்சீர் உரப்பரிந்துரையின்படி, தானியப் பயிர், பயறுவகைப்பயிர்கள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் கரும்பு பயிர்களில் சமச்சீர் உர நிர்வாகத்தைக் கடைப்பிடித்து, 210 விவசாயிகளின் நிலங்களில் முதல்நிலை செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்படவுள்ளன.

2010–11ஆம் ஆண்டில் சோளத்தில் உயர்விளைச்சல் கொண்ட தானியம் மற்றும் தீவனத்திற்கேற்ற புதிய இரகம் கோ(எஸ்) 30 வெளியிடப்பட உள்ளது. கம்பு பயிரில் அதிக மகசூல் மற்றும் குறைந்த வயதுடைய டி.என்.பி.எச். 0642 என்ற வீரிய ஒட்டு இரகம் உருவாக்கப்பட்டுள்ளது. கோபிஎச் 3 துவரை என்ற வீரிய ஒட்டு இரகம் உருவாக்கப்பட்டு அணுசரணை ஆராய்ச்சியில் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. மேலும் அதிக மகசூல் தரக்கூடிய (877 கிலோ/எக்டர்) கோபிஜி 653 என்ற புதிய உளுந்து வளர்ப்பு வெளியிடப்பட உள்ளது. ஐ.சி.ஜீ.வி. 87846 என்ற வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய கொடிக் கொத்து நிலக்கடலை இரகமும், ஐ.சி.ஜீ.வி. 00351 என்ற கொத்து நிலக்கடலை இரகமும், வறட்சியைத் தாங்கக் கூடியது என கண்டறியப்பட்டு, 2010–11ஆம் ஆண்டில் பிரபலப்படுத்தப்பட உள்ளன.

2010–11ஆம் நிதி ஆண்டில் சுமார் 190 டன் வல்லுநர் விதைகள் மற்றும் சுமார் 800 டன் ஆதார மற்றும் உண்மைநிலை விதைகளும் உற்பத்தி செய்து ஆண்டுத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் தோட்டக்கலை ஆராய்ச்சியின் தேவையைப் பூர்த்தி செய்ய வாழை மற்றும் பப்பாளியில் பூச்சி நோய் எதிர்ப்பு குறித்த ஆராய்ச்சி, மிளகாயில் உயிர் ஊக்கிகள் உபயோகித்தல் குறித்த ஆய்வு மற்றும் மிளகுப் பயிரில் வாடல்நோய் தாங்கக் கூடிய வேர்ச்செடிகள் கண்டறிதல் ஆகிய புதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

2010–11ஆம் ஆண்டில் விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலகங்களின் உபயோகத்திற்கான சூரிய ஒளி வெப்பத்தினைக் கொண்டு, குறைந்த செலவிலான உலர் இயந்திரம் வடிவமைத்தல், தாவர உயிர் எரிபொருளைக் கொண்டு வெப்பக்காற்று உற்பத்தி செய்து, சூரியக் கூடார உலர்த்தியில் உபயோகிப்பதற்கான அமைப்பினைக் கொண்ட உலர்த்தியினை மறு வடிவமைப்பு செய்தல், பயோடீசல் தயாரிப்பதற்கான உற்பத்திச் செலவினைக் குறைத்தல், பயறு வகை பயிர் சாகுபடியில் பண்ணைக் கருவிகள் மற்றும் இயந்திரங்களின் பயன்பாடுகளை விவசாயிகளின் மத்தியில் செயல் விளக்கம் செய்து அறிமுகப்படுத்துதல், ஒரு முறை மற்றும் பலமுறை பருத்தி எடுக்கும் அறுவடை இயந்திரத்தை உருவாக்கி விவசாயிகளுக்கு அறிமுகம் செய்தல் ஆகிய பணிகள் நடைபெற உள்ளன. தேசிய வேளாண்மைப் புதுமைத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் ''தொழிற் சாலை சார்ந்த வேளாண் காடுகளில் மதிப்பு கூட்டப்பட்ட சங்கிலி'' என்ற திட்டம் மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி

நிலையத்தினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மரக்கூழ் மற்றும் தீப்பெட்டி குச்சி மரங்களை பயிரிடுதல் அறிமுகப்படுத்தப்படுகிறது. மேலும் இத்திட்டம் 2010–11ஆம் ஆண்டில் தொழிலகங்களால் 2000 எக்டருக்கு விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**II. வேளாண் விரிவாக்கம்**

ஆராய்ச்சி முடிவுகளை விவசாயிகளுக்கு எடுத்துச் செல்வதில் விரிவாக்கக் கல்வி இயக்ககம் சிறப்பான பங்கு ஆற்றுகிறது. 2009–10ஆம் ஆண்டில் வேளாண் அறிவியல் நிலையங்களின் வாயிலாக, தொழில் முனைவோருக்கான பயிற்சி (1311 பேர்) நடத்தப்பட்டது. வயல்வெளி ஆய்வு 63.90 எக்டரில் நடத்தப்பட்டு 238 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். முதல்நிலை செயல்விளக்கத் திடல் 189 எக்டரில் அமைக்கப்பட்டு 475 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். 2010–11ஆம் ஆண்டில், மனிதவள மேம்பாட்டு பயிற்சி, வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

**தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்**

இத்திட்டம் 2009–10ஆம் ஆண்டில் நஞ்சைத் தரிசில் பயறுவகை சாகுபடி, தோட்டக்கால் பயறு வகைகள், மக்காச்சோளம், சூரியகாந்தி, பருத்தி, நிலக்கடலை, செம்மை நெல் சாகுபடி ஆகியவற்றில் உபவடிநில பாசன பகுதிக்கேற்ப மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில் நுட்பங்களை கடைபிடித்து செயல்படுத்தப்பட்டன. இந்த நிதி ஆண்டில் (2010–11) செம்மை நெல் சாகுபடி செயல்விளக்கப்பாத்திகள் 2818 எக்டரில் அமைக்கப்படவுள்ளன. துல்லிய பண்ணையத் திட்டம், வாழை (80 எக்டர்), காய்கறி பயிர்கள் (105 எக்டர்) மற்றும் கரும்பு (210 எக்டர்) பயிர்களில் செயல்படுத்தப்படவுள்ளன. இத்திட்டத்தில் இ–வேளாண்மை என்ற வேளாண் விரிவாக்கத் திட்டம் தகவல் மற்றும் தொழில் நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி விவசாயிகளிடையே 2010–11ஆம் ஆண்டில் 25 உபவடிநில பாசன பகுதிகளில் ரூ.1.58 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

**தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்**

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில், 2007–08, 2008–09 மற்றும் 2009–10 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ.3611.86 இலட்சம், ரூ. 715.05 இலட்சம் மற்றும் ரூ.105.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை, தமிழ்நாட்டிலுள்ள 385 வட்டாரங்களில், முதற்கட்டமாக 224 வட்டாரங்களில் ரூ.1634.54 இலட்சம் செலவில் தானியங்கி வானிலை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதனால் அவ்வப்போதைய வானிலைக் குறிப்புகளைத் தெரிந்து கொள்வதுடன், வானிலை முன்னறிவிப்புத்திறன் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், மண்வளப் பாதுகாப்பு மற்றும் வேளாண் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கும், வேளாண் தொழில் முனைவோருக்கும் வழங்கும் பொருட்டு, 195 வேளாண் சேவை மையம் மற்றும் சிறு மண் ஆய்வுக்கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதன் பொருட்டு, 361 வேளாண் சேவை மையம் அமைக்க முனைவோருக்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

வேளாண் தொழில் நுட்பங்களையும், வானிலைத் தகவல்களையும் விலை விபரங்களையும் உடனுக்குடன் விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு, 'வேளாண் இணையதளம்', ரூ.496.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வடிவமைக்கப்பட்டு 2,00,000 பக்கங்களில் விரிவான தொழில் நுட்பங்கள் 2009–10ல் இணையதளத்துடன் இணைக்கப்பட்டது.

2009–10ஆம் ஆண்டில், தேமல் நோய் நச்சுயிரியற்ற மரவள்ளி கரணைகள் உற்பத்தி மற்றும் விநியோகிக்கும் திட்டம், ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீட்டிலும், தமிழகத்தின் கடலோர மணல் பகுதிக்கான நடமாடும் பாசன அமைப்பினை அறிமுகப்படுத்தும் திட்டத்தை ரூ.45 இலட்சம் நிதி ஒதுக்கீட்டிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2010–11ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.